SPMC பதவி வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம்
## சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு

பின்வரும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப தகுதி வாய்ந்த, காத்திரமான, சுய ஊக்கம் உடைய, தொழிலை எதிர்பார்க்கும் நபர்களிடமிருந்து அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் விண்ணப்பங்களை கோருகின்றது.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:

i. இலங்கைப் பிரஜையாகவும்
ii. பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும், தீவில் எப்பாகத்திலேனும் பணியாற்றவும் உடலியல், உளவியல் ரீதியில் தகுதி உடையவராகவும்
iii. சிறந்த நல்லொழுக்கம் உடையவராகவும்

இருக்க வேண்டும்.

**1. முகாமையாளர் பதவி - தயாரித்தல் (MM 1-1 - தரம் II)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

**(a)** (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து இயற்கை விஞ்ஞானம், மருந்தாக்கல் அல்லது பொறியியல் பிரிவில் முதல் தரப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்தில் /நிறுவனத்தில் இருந்து அதற்கிணையாக வேறு ஏதேனும் இளங்கலைப் பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

**(b)** கணனி பற்றிய அறிவு இருத்தலும் வேண்டும்

அத்துடன்

**(c)** பதவியின் பின்னர் மருந்துகள் உற்பத்தித் துறையில் ஆகக்குறைந்தது 05 ஆண்டு கால அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (கீழே 1 அல்லது 2)**

1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

2 பதவிக்கு பொருத்தமான விடயப் பரப்பில் அதாவது கனிஷ்ட முகாமையாளர் (JM 1-1) வகுதியில் ஒரு பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்:** MM 1-1 ரூ. [91,690-10x2,480-15x3,450=168,240]

  (01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 91,690/= அடிப்படை சம்பளம் செலுத்தப் படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 71,730/=**).

  மேற்குறித்த சம்பளங்களுக்கு மேலதிகமாக, அரசாங்கம் அங்கீகரித்துள்ள ஏனைய கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

- **வயதெல்லை:-** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**2. உதவி முகாமையாளர் - (JM 1-1- தரம் II)**

**தகைமைகள்:- வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. (a) மொரட்டுவப் பல்கலைக்கழம் வழங்கும் எந்திரவியல்/மின்னியல்/இலத்திரனியல் துறையில் பொருத்தமான தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (NDT) சான்றிதழை அல்லது அதற்கிணையான சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(b) கணனி பற்றிய அறிவு இருத்தலும் வேண்டும்.

அத்துடன்

(c) பதவியின் பின்னர் ஒரு அரசாங்க திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/நியதிச்சட்டசபையில் அல்லது பிரபல்லியமான வணிக ஸ்தாபனத்தில் எந்திரவியல்/மின்னியல்/இலத்திரனியல் துறையில் ஆகக்குறைந்தது 6 ஆண்டு கால அனுபவத்தை பெற்று இருத்தல் வேண்டும்.

அல்லது

2. (a) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த பல்கலைக்கழகத்தில் இருந்து பொறியியலில் இளங்கலைப் பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(b) பதவியின் பின்னர் ஒரு அரசாங்க திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/நியதிச்சட்டசபையில் அல்லது பிரபல்லியமான வணிக ஸ்தாபனத்தில் எந்திரவியல்/மின்னியல்/இலத்திரனியல் துறையில் ஓராண்டு கால அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

1 மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2 பதவிக்கு பொருத்தமான விடயப் பரப்பில் அதாவது 'முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப (MA 2-1) தரம் II இன் ஒரு பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்:-** JM 1-1 ரூ. [72,650 -10 x1,360 -18x2,040=122,970]

  (01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 72,650/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 58,615/=).**

- **வயதெல்லை:-** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

## 3. அந்தரங்க செயலாளர் பதவி - JM-1-1 தரம் II

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(a) செயலகங்கள் பட்டய நிறுவகத்தின் (Chartered Institute of Secretaries) பட்டய செயலாளர் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(b) நிமிடத்திற்கு 40 சொற்கள் என்ற தட்டெழுத்து வேகத் தறனையும் மற்றும் நிமிடத்திற்கு 80 சொற்கள் என்ற சுருக்கெழுத்து வேகத் திறனையும் கொண்டிருத்தல்.

அத்துடன்

(c) கணனி பற்றிய அறிவு இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(d) பதவியின் பின்னர் ஒரு அரசாங்க திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ நியதிச்சட்டசபையில் அல்லது பிரபல்லியமான வணிக ஸ்தாபனத்தில் செயலகப் பணித் துறையில் ஆகக்குறைந்தது 10 ஆண்டு கால அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

1. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. பதவிக்கு பொருத்தமான விடயப் பரப்பில் அதாவது தொழில்நுட்பம் சாராத 'முகாமைத்துவ உதவியாளர் - (MA 1-1) தரம் II இன் ஒரு பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**: JM 1-1 ரூ. [72,650 – 10 x1,360 - 18 x 2,040= 122,970]

  (01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 72,650/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 58,615/=**).

- **வயதெல்லை:-** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

4. **தரக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் பதவி - (JM-1-1 தரம் II)**

**தகைமைகள்:- வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் அடங்கலாக ஒரு B.Sc பொது பட்டத்தை அல்லது இரசாயனவியலில் ஒரு விஷேட பட்டத்தை அல்லது அதற்கு இணையான ஒரு பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(a) கணனி பற்றிய அறிவு இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(b) பதவியின் பின்னர் மருந்தாக்க அல்லது உணவு தொழில்துறையில் ஓராண்டு கால அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

1 மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2 பதவிக்கு பொருத்தமான விடயப் பரப்பில் அதாவது ‘முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப (MA 2-1) தரம் II இன் ஒரு பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**: JM 1-1 ரூ. [72,650-10x1,360-18x2,040= 122,970]

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 72,650/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 58,615/=**).

- **வயதெல்லை:-** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**5. மருந்தாக்க தொழில்நுட்பவியல் - தயாரிப்பு பதவி (MA -2-1 - தரம் III)**

**தகைமைகள்**:

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - கீழுள்ள (a), (b) அல்லது (c)**

**(a)** மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு தொழில்நுட்ப/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மருந்தாக்க துறைக்கு பொருத்தமாக வழங்கும் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை மட்டம் 5 இற்கு குறையாத ஒரு திறன் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

**(b)** (i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் பதவிக்கு பொருத்தமான விஞ்ஞான அல்லது தொழில் நுட்ப மூன்று (03) பாடங்களில் (பொதுப் பரீட்சை வினாத்தாள் தவிர) சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(iii) ஆறு மாதத்திற்கு குறையாத கணனி சான்றிதழ் பாடநெறி ஒரு மேலதிக தகைமையாக கருதப்படும்.

அத்துடன்

(iv) பிரபல்லியமான ஒரு மருந்தாக்கல் நிறுவனத்தில் குறித்த துறைக்கு பொருத்தமான ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**(c) பயிலுநர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல்:-**

மேற்குறித்த (b) (i), (ii), (iii) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய பயிலுநர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தில் ஒரு மருந்தாக்க தொழில்நுட்பவியல் - தயாரிப்பு பயிலுநராக 1 ½ ஆண்டு கால உள்ளகப் பயிற்சியை பூர்த்தி செய்து எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மருந்தாக்க தொழில்நுட்ப தயாரிப்பாளராக நிரந்தர ஆளணியில் உள்ளீர்க்கப்படுவதற்கு முற்றகைமை பெற்றவர்காளாக கருதப்படுவார்கள்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**: MA 2-1 : ரூ. [50,540-10x540-7x 30-4x890-20x1,190-87,710]

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 50,540/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 43,379/=**).

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**6. பராமரிப்புத் தொழில்நுட்பவியலாளர் - (மின்சார/இலத்திரனியல்/எந்திரவியல் மற்றும் குளிரூட்டல்) (MA -2-1 - தரம் III)**

**தகைமைகள்**:

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு தொழில்நுட்ப/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மருந்தாக்க துறைக்கு பொருத்தமாக வழங்கும் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை மட்டம் 5 இற்கு குறையாத ஒரு திறன் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**:- MA 2-1: ரூ. [50,540-10x540-7x630-4x890-20x1,190-87,710]

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 50,540/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 43,379/=**).

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**07. திட்டமிடுகை மற்றும் பெறுகை உதவியாளர் பதவி (MA 2 -1-தரம் III) தகைமைகள்:-**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:- கீழுள்ள (a) அல்லது (b)**

**(a)** மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு தொழில்நுட்ப/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மருந்தாக்க துறைக்கு பொருத்தமாக வழங்கும் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை மட்டம் 5 இற்கு குறையாத ஒரு திறன் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

**(b)** (i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமை சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் பதவிக்கு பொருத்தமான விஞ்ஞான அல்லது தொழில் நுட்ப மூன்று 03) பாடங்களில் (பொதுப் பரீட்சை வினாத்தாள் தவிர) சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(iii) ஆறு மாதத்திற்கு குறையாத கணனி சான்றிதழ் பாடநெறி ஒரு மேலதிக தகைமையாக கருதப்படும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**:- MA 2-1: ரூ. [50,540-10x540-7x630-4x890-20x1,190-87,710]

  (01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 50,540/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 43,379/=**).

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**08. தரக்கட்டுப்பாட்டு தொழில்நுட்பவியலாளர் (MA 2 -1-தரம் III)**
**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:- கீழுள்ள (a) , (b) அல்லது (c)**

**(a)** மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு தொழில்நுட்ப/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மருந்தாக்க துறைக்கு பொருத்தமாக வழங்கும் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை மட்டம் 5 இற்கு குறையாத ஒரு திறன் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

**(b)** (i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமை சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி அடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் இரசாயனவியலில் ஒரு திறமை சித்தி அடங்கலாக 02 திறமை சித்திகளுடன் பதவிக்கு பொருத்தமான விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப பாடங்களில் (பொதுப் பரீட்சை வினாத்தாள் தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) ஆறு மாதத்திற்கு குறையாத கணனி சான்றிதழ் பாடநெறி ஒரு மேலதிக தகைமையாக கருதப்படும்.
அத்துடன்

(iv) பிரபல்லியமான ஒரு ஆய்வுகூடத்தில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால பகுப்பாய்வு அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**(c) பயிலுநர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல்:-**

மேற்குறித்த (b) (i), (ii), (iii) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய நபர்கள் பயிலுநர்களாக ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தில் ஒரு மருந்தாக்க தொழில்நுட்பவியல் - தயாரிப்பு பயிலுநராக 1 ½ ஆண்டு கால உள்ளகப் பயிற்சியை பூர்த்தி செய்து எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மருந்தாக்க தொழில்நுட்ப தயாரிப்பாளராக நிரந்தர ஆளணியில் உள்ளீர்க்கப்படுவதற்கு முற்றகைமை பெற்றவர்காளாக கருதப்படுவார்கள்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**: MA 2-1 : ரூ. [50,540-10x540-7x 30-4x890-20x1,190-87,710]

  (01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 50,540/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 43,379/=).**

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**09. களஞ்சிய காப்பாளர் பதவி (MA 2 -1-தரம் III)**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:- (a) அல்லது (b) இன் கீழுள்ள தகைமைகள்**

**(a)** மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு தொழில்நுட்ப/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மருந்தாக்க துறைக்கு பொருத்தமாக வழங்கும் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை மட்டம் 5 இற்கு குறையாத ஒரு திறன் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

**(b)** (i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமை சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி அடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதாவது ஒரு பிரிவில் பதவிக்குப் பொருத்தமான மூன்று (03) பாடங்களில் (பொதுப் பரீட்சை வினாத்தாள் தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(iii) ஆறு மாதத்திற்கு குறையாத கணனி சான்றிதழ் பாடநெறி ஒரு மேலதிக தகைமையாக கருதப்படும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**: MA 2-1 : ரூ. [50,540-10x540-7x 30-4x890-20x1,190-87,710]

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 50,540/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 43,379/=).**

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**10. முகாமைத்துவ உதவியாளர் பதவி - தொழில்நுட்ப சாராத (MA 1-1-தரம் III)**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

**கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:**

(a) க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் அடங்கலாக நான்கு (04) பாடங்களுக்கு திறமை சித்திகளுடன் ஒரேதடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம் / தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

அத்துடன்

(b) (i) க.பொ.த. (உ/த) பரீட்சையில் 03 பாடங்களில் (பொது வினாத் தாள் தவிர) சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(c) ஆறு மாதத்திற்கு குறையாத கணனி பாடநெறி சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

பின்வரும் தகைமைகளையுடைய ஆரம்ப மட்டத் தேர்ச்சி - அரைத்-தேர்ச்சி மற்றும் ஆரம்ப மட்ட அரைத்-தேர்ச்சி வகுதிகளில் உள்ள ஊழியர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்களாவர்.

**கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:**

(a) க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் அடங்கலாக நான்கு (04) பாடங்களுக்கு திறமை சித்திகளுடன் ஒரேதடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம் / தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(b) ஆறு மாதத்திற்கு குறையாத கணனி பாடநெறி சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

**ஏனைய:**

மேலேவுள்ள ஊழியர் வகுதியில் ஒரு நிரந்தர பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு கால திருப்திகரமான சேவை அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-** ஒரு நிரந்தர பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னருள்ள ஏதாவது ஒரு சேவை காலம் அல்லது ஏதாவது ஒரு பதவிக்கு நிரந்தர அடிப்படையில் நியமனத்திற்கான ஒரு முற்-தேவைப்பாடாக பயிற்சியின் கீழ் பூர்த்தி செய்ய வேண்டிய ஏதாவது ஒரு சேவை காலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்படுத்தப்படும் அந்த ஐந்து ஆண்டு சேவை காலத்தினுள் கணக்கில்கொள்ளப்படாது. அமைய/தற்காலிக அடிப்படையிலான ஏதாவது சேவை காலமும் இந்த நோக்கத்திற்காக கணக்கில்கொள்ளப்படாது.

- **சம்பள அளவுத்திட்டம்**: MA 1-1 : ரூ. [46,220-10x540-7x630-4x890-20x1,190-83,390]

  (01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 46,220/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 40,403/=).**

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**11. மருந்தாக்கல் பூரண உதவியாள் பதவி - (PL-2-தரம் III)**

**தகைமைகள்:-**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1, 2, அல்லது 3)**

(1) மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு தொழில்நுட்ப/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மருந்தாக்க துறைக்கு பொருத்தமாக வழங்கும் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை மட்டம் 2 இற்கு குறையாத ஒரு திறன் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

(2) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் நான்கு (04) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

மருந்துகனை பொதியிடுவதில் ஓராண்டு அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**பயிலுநர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல்:-**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் நான்கு (04) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தில் ஒரு மருந்தாக்கல் பூரண உதவியாள் பயிலுநராக உள்ளக பயிற்சி காலத்தில் ஓராண்டு பயிற்சியை நிறைவு செய்தவர்கள் மருந்தாக்கல் பூரண உதவியாளராக நிரந்தர ஆளணியில் உள்ளீர்க்கப்படுவார்கள்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

2. தேசிய வாழ்க்கைத்தொழில் பயிற்சி மட்டம் 2 இற்கு குறையாத திறமைகளுடன் ஒரு செயன்முறை பரீட்சையில் நிரூபித்து உரிய துறையில் ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டு கால தொழில் அனுபவத்தையுடைய அரைத்-தேர்ச்சி மட்டத்திலுள்ள ஊழியர்கள் இந்த பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

- **சம்பள அளவுத்திட்டம்:-** PL-2-ரூ.42,300/=-10x490-10x540-0x590-12x630-66,060/=

  (01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 42,300/= அடிப்படை சம்பளம் செலுத்தப்படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 37,715/=).**

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** கட்டமைந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

**12. சாரதி - (P L 3 - தரம் III)**

**தகைமைகள்:**
**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆகக்கூடியது இரண்டு தடவைகளில் ஆகக்குறைந்தது இரண்டு (02) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

   அத்துடன்
2. கனரக வாகனங்களுக்கு மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் வழங்கும் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

   அத்துடன்
3. சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்ற பின்னர் வாகனம் ஓட்டுவதில் ஆகக்குறைந்தது மூன்று (03) ஆண்டு கால அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

   அத்துடன்
4. இ.போ.ச. நடத்தும் வாகனம் ஓட்டுதல் பரீட்சையில் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

1. கனரக வாகனங்களுக்கு மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் வழங்கும் சாரதி அனுமதிப்பத்திரத்தையும், சாரதி அனுமதிப்பத்திரத்தையும் மற்றும் இ.போ.ச. நடத்தும் வாகனம் ஓட்டுதல் பரீட்சையில் தகுதியையும் பெற்றதன் பின்னர் வாகனம் ஓட்டுவதில் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டு கால அனுபவத்தை பெற்று இருத்தல் வேண்டும்.

   அத்துடன்
2. ஆரம்ப அரைத்-தேர்ச்சி (PL2) அல்லது ஆரம்ப தேர்ச்சிசாரா (PL1) வகுதியில் ஒரு நிரந்தர பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**:PL-3-ரூ. 43,280/= -10x490-10x540-10x590-12x630-67,040/=

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 43,280/= அடிப்படை சம்பளம் செலுத்தப்படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 38,387/=**).

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** கட்டமைந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

**13. பணி உதவியாளர் பதவி - (P L-1- தரம் III)**

**தகைமைகள்**:

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றியவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

- **சம்பள அளவுத்திட்டம்:**PL-1-ரூ.40,500/= - 10x450-10x490-7x540-15x590-62,530/=
  (01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 40,500/= அடிப்படை சம்பளம் செலுத்தப் படும். **2025 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 36,475/=**).
- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
- **ஆட்சேர்ப்பு முறை:-** கட்டமைந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

**பக்க நன்மைகள்:**

- வரவு மற்றும் செயலாற்றுகை ஊக்குவிப்புத்தொகை
- பயன்படுத்தாத வருடாந்த மற்றும் சுகயீன லீவுகளுக்கு பணம் கிடைத்தல்
- மருத்துவக் காப்புறுதி கிடைத்தல் மற்றும் மருத்துவச் செலவுகள் மீளளிப்பு
- EPFஇற்கு சம்பளத்தின் 15% வீதம் கூட்டுத்தாபனத்தால் பங்களிக்கப்படுதல் மற்றும் 10% வீதம் ஊழியர்களால் பங்களிக்கப்படுதல்
- ETFஇற்கு சம்பளத்தில் 3% கூட்டுத்தாபனத்தால் பங்களிக்கப்படுதல்.
- 1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைச் சட்டத்திற்கும், MSD சுற்றறிக்கைக்கும் இணங்க பணிக்கொடை செலுத்தப்படுதல்
- மேலும் ஏனைய பக்க நன்மைகள்

**பொதுவான அறிவுறுத்தல்கள்:**

- குறித்துரைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தைப் பயன்படுத்தி தயாரித்த விண்ணப்பங்கள் உறவினர் சாராத இரண்டு நபர்களின் பெயர்களையும், முகவரிகளையும் மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

எல்லாக் கல்வி சான்றிதழ்களினதும் சான்றுபடுத்தப்பட்டுள்ள பிரதிகள் விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் **https://www.spmc.gov.lk**என்ற இணையத்தளத்திலிருந்து கீழிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

- அரசாங்கத் திணைக்களங்களிலும் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலும் பணியாற்றுகின்ற ஊழியர்கள், இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அதற்கான நியமனத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர்கள் விடுவிக்கப்படுவார்களா என்பதை சான்றுபடுத்த வேண்டிய தத்தமது நிறுவனத் தலைவர்களின் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கிவருகின்ற கடித உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு கீழ்காணும் முகவரிக்கு இந்த விளம்பரத் திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
- மேற்குறித்த தேவைப்பாடுகளை அனுசரிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்**
இலக்கம் 11,சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை
கந்தாவெல எஸ்ட்ரேட்டு – இரத்மலான
2025.10.12